கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
முதலாம் வருட கலைமாணித் தேர்வு 2010/2011
(யூன்/யூலை 2013) (வெளிவாரி)

23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

# ECO 101 Principles of Economics

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

01.(அ) பொருளியலில் அடிப்படை பொருளாதாரப்பிரச்சினை என்பதனால் கருதப்படுவது யாது?

(05 புள்ளிகள்)

(ஆ) "நிலைமாறும் பொருளாதாரம்" என்ற பதத்தினை உதாரணங்களுடன் விளக்குக?

(06 புள்ளிகள்)

(இ) "முதலாளித்துவப் பொருளாதார முறையில் நுகர்வோன் இறமை உடையவன்" என்ற கூற்றை விமர்சன ரீதியாக ஆராய்க?

(09 புள்ளிகள்)

02.(அ) உற்பத்திச்சாத்தியவளையி ஒன்றினை வரையும்போது மேற்கொள்ளப்படும் எடுகோள்களைத் தருக?

(05 புள்ளிகள்)

(ஆ) மொத்தப்பயனையும் எல்லைப்பயனையும் வேறுபடுத்துக?

(05 புள்ளிகள்)

(இ) பின்வரும் விடையங்களை உற்பத்திச்சாத்திய வளையியில் குறித்துக் காட்டுக?

(a) வளங்களின் அருமை
(b) குறைவளப் பயன்பாடு
(c) நிறைதொழில் மட்டம்
(d) பொருளாதார வீழ்ச்சி
(e) ஒரு பொருள் சார்பான வளர்ச்சி

(5x2=10 புள்ளிகள்)

03.(அ) கேள்வி நீட்டம், கேள்வி ஒடுக்கம் என்பனவற்றை வேறுபடுத்துக?

(05 புள்ளிகள்)

(ஆ) நிரம்பல்விதி என்பதனால் கருதப்படுவது யாது?

(05 புள்ளிகள்)

(இ) போட்டிச் சந்தை ஒன்றில் விற்கப்படும் ஒரு பண்டத்திற்கான சந்தைக் கேள்வி நிரம்பற்சார்புகள் கீழேதரப்படுகின்றன.

$Qd = 20\ p$

$Qs = -8 + 6p$

இத்தரவுகளைப் பயன்படுத்தி இப்பண்டத்தின் சமநிலை விலையையும் தொகையையும் காண்க?

(05 புள்ளிகள்)

(ஈ) "உச்ச விலையானது சந்தைச் சமநிலை விலையிலும் பார்க்க குறைவாக நிர்ணயிக்கப்படுவதனால் நுகர்வோருக்கு எப்பொழுதும் நன்மை பயக்கும்" இக்கூற்றை ஏற்றுக்கொள்கின்றீரா? வரைபடத்தின் உதவியுடன் விளக்குக?

(05 புள்ளிகள்)

04.(அ) நீண்டகாலச் செலவையும், குறுங்காலச் செலவையும் வேறுபடுத்து?

(08 புள்ளிகள்)

(ஆ)நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் குறுங்காலச் சமநிலைகளை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக?

(12 புள்ளிகள்)

05. (அ) பேரினப் பொருளாதாரம் ஒன்றின் குறிக்கோள்கள் எவை?

(06 புள்ளிகள்)

(ஆ) "பேரினப் பொருளாதாரம் ஒன்றின் இலக்குகளை ஒரேநேரத்தில் அடையப்பெறுவதில் பிரச்சினைகள் காணப்படுகின்றன." ஆராய்க.

(07 புள்ளிகள்)

(இ) பணவீக்கத்தின் பொருளாதார விளைவுக்களை விளக்குக.

(07 புள்ளிகள்)

06.(அ) வணகவங்கி ஒன்றின் முதன்மைப் பணிகளை விளக்குக?

(10 புள்ளிகள்)

(ஆ) பொருளாதார உறுதிப்பாட்டில் மத்தியவங்கியின் நாணயக்கொள்கைக் கருவிகளின் பிரையோகங்களை விளக்குக?

(10 புள்ளிகள்)

07. திறந்த பொருளாதாரம் ஒன்றின் தகவல்கள் பின்வருமாறு இதனை அடிப்படையாகக் கொண்டு கீழ்வருவனவற்றிற்கு விடை தருக.

$C = 64 + 0.8\ Yd$

(i) தனியார் முதலீடு (I) = 40 Million

(ii) அரசாங்கச் செலவு (G) = 50 Million

(iii) ஏற்றுமதிகள் (X) = 30 Million

(iv) இறக்குமதிகள் (M) = 02 Million

அரச வரிவருமானம் காரணி வருமானத்தின் (Y) 10% சமனாகும்

LIBRARY
23 AUG 2013
EASTERN

(1) சமநிலைத் தேசிய வருமானத்தைக் காண்க? (08 புள்ளிகள்)
(2) வரி வருமானத்தைத் துணிக. (05 புள்ளிகள்)
(3) நுகர்வு, சேமிப்பு என்பவற்றைத் துணிக. (07 புள்ளிகள்)

08. (அ) சென்மதிநிலுவை ஒன்றின் உள்ளடக்கங்களைச் சுருக்கமாக விளக்குக? (10 புள்ளிகள்)

(ஆ) சென்மதிநிலுவைப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்கான குறுங்கால மற்றும் நீண்டகால தீர்வுகளை அடையாளப்படுத்தி விளக்குக? (10 புள்ளிகள்)